தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 16-9-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## செப்டம்பர் 2014 மாதத்துக்கான பூச்சி நோய் கண்காணிப்பு - கட்டுப்பாட்டு முறைகள்

செப்டம்பர் மாதத்துக்கான பூச்சி நோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு முறைகள் குறித்து பயிர் பாதுகாப்பு மையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் அறிக்கை.

**நெல்பயிர்**

கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், மதுரை, புதுக்கோட்டை, திருநெல்வேலி, திருவாரூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் நெல் பயிரில் இலைச் சுருட்டுப் புழு மற்றும் தண்டுப் புழு தாக்குதல் பரவலாக காணப்படுகின்றன. பூச்சிகளை கட்டுப்படுத்த வயல்களில் விளக்கு பொறி அமைத்து (1 / ஏக்கர்) அந்துப் பூச்சிகளை கவர்ந்து அழிக்க வேண்டும்.

பூச்சிகளின் தாக்குதல் அதிகமாய் தென்பட்டால் வேப்பங் கொட்டைச்சாறு 5 சதம் அல்லது கீழ்காணும் ஏதாவது ஒரு மருந்தினை பாசலோன் 35 இ. சி 1500 மில்லி / எக்டர் பாஸ்மோமிடான் 40 எஸ். எல் 600 மில்லி எக்டர் அல்லது பிரபினோபாஸ் 50 இ. சி. 1000 மில்லி / எக்டர் தெளிக்கவும்.

**பருத்தி**

தேனி மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் பருத்தியில் காய்ப்புழுவின் தாக்குதல் தென்படுகிறது. இவற்றை கட்டுப்படுத்த இனக்கவர்ச்சி பொறிகளை ஏக்கருக்கு ஐந்து வைத்து தாய் ஆண் அந்து பூச்சிகளை கவர்ந்து அழிக்கவும். அதிகம் சேதம் உள்ள பயிர்களில் கீழ்காணும் ஏதாவது ஒரு மருந்தினை பாசலோன் 35 இ.சி. 2.5 லிட்டர் / எக்டர் அல்லது ட்ரைஅசோபாஸ் 40 இ.சி. 2 லிட்டர் / எக்டர் அல்லது அசிபேட் 75 எஸ். பி. 1.30 கிலோ / ஏக்கர் பயிர்களில் தெளிக்கவும்.

**நிலக்கடலை**

விருத்தாச்சலம், திண்டிவனம், திருநெல்வேலி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் நிலக்கடலையில் இலைச்சுருட்டு புழுவின் தாக்குதல் தென்படுகிறது. இவற்றை கட்டுப்படுத்த ஏக்கருக்கு ஒரு விளக்கு பொறி வைத்து அந்துப் பூச்சிகளை கவர்ந்து அழிக்கவும். தேவைப்படின் கீழ்காணும் ஏதாவது ஒரு மருந்தினை பயிர்களில் தெளிக்கவும். டைகுளோர்வாஸ் 75 எஸ். எல் 625 மில்லி / எக்டர் அல்லது பாஸ்போமிடான் 40 எஸ். எல் 750 மில்லி / எக்டர் அல்லது குளோர் பைரி பாஸ் 20 இ . சி. 1250 மில்லி / எக்டர் அல்லது பாசலோன் 35 இ . சி 750 மில்லி / எக்டர்.

**தென்னை**

கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் தென்னையில் சிகப்பு கூன் வண்டு தாக்குதல் பரவலாக காணப்படுகின்றது. இவற்றைக் கட்டுப்படுத்த மானோகுரோட்டபாஸ் மருந்து 10 மில்லி மற்றும் தண்ணீர் 10 மில்லி கலந்து சிறிய பாலிதீன் பைகளில் வேர் மூலம் செலுத்த வேண்டும். மருந்து கட்டி 45 நாட்கள் இளநீரோ காய்களோ பரிக்க கூடாது.

**தகவல்**

இயக்குநர்,
பயிர் பாதுகாப்பு மையம்,
தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம்,
கோயைம்புத்தூர் – 641 003.

மக்கள் தொடர்பு அலுவலர்